பக்கங்கள் 21

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | வைகாசி 29 வியாழக்கிழமை 12.06.2025 | அதிர்வு 312

## மின்சாரக் கட்டணம் 15 வீதத்தால் உயர்வு

இன்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் மின்சாரக் கட்டணம் 15 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

03




# அநுரவுக்கு ஜேர்மனியில் அமோக வரவேற்பு

## இரு நாட்டு ஜனாதிபதிகளும் இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பில் விரிவான பேச்சுவார்த்தை

ஜேர்மனியக் கூட்டாட்சி குடியரசுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கு, ஜேர்மன் ஜனாதிபதி பிராங்க் வால்டர் ஸ்டெய்ன்மியரினால் நேற்று அமோக வரவேற்பளிக்கப் பட்டது.

பேர்லினின் பெல்வீவ் மாளிகைக்கு வருகை தந்த ஜனாதிபதி அநுரகுமார திஸ நாயக்க, ஜேர்மன் முப்படை மரியாதையுடன் வரவேற்கப் பட்டதுடன், முப்படைகளின் அணிவகுப்பையும் அவர் பார்வையிட்டார்.

உத்தியோகபூர்வ வரவேற்பு 02



# சாவகச்சேரியில் சைக்கிளில் தெரிவான இருவரைப் பதவி நீக்கக் கோரி வழக்கு!



## இன்று உயர்நீதிமன்றத்தில் பரிசீலனை

(ந.லோகதயாளன்)

சாவகச்சேரி நகர சபை மற்றும் பிரதேச சபைக்கு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் சார்பில் போட்டியிட்டு உறுப்பினர்களாகத் தேர்வான இருவர் அந்தந்த உள்ளூராட்சி சபைகளில் உறுப்பினர்களாகப் பதவியேற்பதற்கு எதிராகத் தடை விதிக்கக் கோரி உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்தச் சபைகளில் ஒன்று தவிசாளரைத் தெரிவு செய்வதற்காக நாளை கூடவிருக்கையில் இன்று இந்த மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்படவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

02



சாவகச்சேரி நகர சபைக்கான முதலாவது கூட்டம் – அதன் நகர பிதாவை தெரிவு செய்வதற்கான கூட்டம் – நாளை நடைபெற இருக்கையில், அந்த சபைக்கும் சாவகச்சேரி பிரதேச சபைக்கும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி சார்பில் தெரிவான இருவருக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் இன்று பரிசீலனைக்கு வருகின்றன.

நேரம் பார்த்து வைக்கப்பட்ட ‘செக் – மேட்’ போல இந்நகர்வு தெரிகிறது.

வழக்கமாகத் தெரிவான உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் Wri of quo warranto (தகுதி முறைகேள் நீதிப் பேராணை மனு) வழக்குகளே தாக்கல் செய்யப்படும்.

02

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**இரகசியம் பரகசியம்...**

முன்னர் யாழ். மாநகர சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட சட்டத்தரணி மணிவண்ணனுக்கு எதிராகவும், ஈ.பி.டி.பியின் சார்பில் தெரிவான ஜெகனுக்கு எதிராகவும் இத்தகைய 'கோ வரண்டோ' வழக்கே தாக்கல் செய்யப்பட்டு, தடை உத்தரவு பெறப்பட்டது. அது ஒரு பதவியில் அல்லது அதிகாரத்தில் ஒருவர் இருப்பதை கேள்விக்கு உட்படுத்தும் ரிட் மனு ஆகும்.

ஆனால் இப்போது நீதிமன்றத்தில் அவர்களின் பதவி தொடர்பாக கேள்விக்குள்ளாக இருக்கும் அகில இலங்கைத் தமிழக் காங்கிரஸ் கட்சியின் இரு உறுப்பினர்களும் தத்தமது பதவிகளுக்கான சத்திய பிரமாணங்களை செய்து கொண்டுள்ள போதிலும், அவர்களின் சபைகளின் கூட்டத்தில் பிரசன்னமான பின்னரே அந்தப் பதவிகளை உத்தியோகபூர்வமாக வகிக்க தொடங்குபவர்கள் ஆவர். அதுவரையில் அவர்கள் தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர்கள் மட்டுமே. அந்தப் பதவியை வகிக்கும் உறுப்பினர்கள் அல்லர். அதனால் தான் அவர்களுக்கு எதிராக 'கோ வரண்டோ' வழக்குத் தாக்கல் செய்யப்படாமல் அடிப்படை உரிமை மீறல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட பிரதேச சபைகளின் உறுப்பினர்களாக அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் அறிவித்துள்ள போதிலும், அவர்கள் அப்பதவியை வகிக்கத் தகுதியற்றவர்கள் என்பதை அறிவிக்கக் கோரியே உயர் நீதிமன்றத்தில் இந்த அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே யாழ். மாநகர சபையில் மணிவண்ணனுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் ஆரம்பத்திலேயே உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு வழங்கிய முன்னுதாரணம் உண்டு.

இந்த முன்னுதாரணத்தின் அடிப்படையில் இப்போது தாக்கல் செய்யப்பட்டுள்ள இரண்டு அடிப்படை உரிமை மீறல் மனுக்களிலும் சம்பந்தப்பட்ட எதிர் மனுதாரர்கள் இருவரும் தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என அறிவிக்கப்பட்ட உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களாகச் செயல்படுவதற்கு இடைக்காலத் தடை விதிக்கும் கோரிக்கை இன்று மனுதாரர்களால் உயர்நீதிமன்றத்தில் முன்வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த இரு உறுப்பினர்களும் தாம் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூராட்சி சபைகளின் எல்லைக்குள் வசிப்பவர்கள் அல்லர் என்று கூறப்படுகிறது. சாவகச்சேரி நகர சபைக்குத் தெரிவு செய்யப்பட்டவர் சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குள்ளும், சாவகச்சேரி பிரதேச சபைக்குத் தெரிவு செய்யப்பட்டவர் சாவகச்சேரி நகர சபை எல்லைக்குள்ளும் வசிப்பவர்கள் என்றும் கூறப்படுகின்றது.

அதை மனுதாரர்கள் இன்றைய வழக்கு விசாரணையில் உயர் நீதிமன்றத்திற்கு ஐயம்திரிபற – திருப்தி தரும் விதத்தில் – நிரூபிப்பார்களாயின் மேற்படி இரு உறுப்பினர்களும் பதவியேற்பதற்கு எதிராக நீதிமன்றம் தடை விதிப்பதற்கு வாய்ப்பு இருப்பதாகத் தோன்றுகிறது.

இன்று இந்த இரு மனுக்களையும் பரிசீலனைக்கு எடுக்கும் உயர் நீதிமன்றம் அவற்றை விசாரணைக்கு ஏற்கும் முடிவை எடுக்குமா, அதன் அடிப்படையில் எதிர்மனுதாரர்களுக்கு நோட்டீஸ் பிறப்பிக்க நீதிமன்றம் உத்தரவிடுமா, எதிர் மனுதாரர்களான இருவரும் தத்தமது சபைகளில் பதவி ஏற்பதற்கு எதிராக உயர் நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு விதிக்குமா என்பவை எல்லாம் இன்று மாலைக்குள் தெரியவரும் என எதிர்பார்க்கலாம்.

யாழ். மாவட்டத்தில் 17 சபைகளிலும் அதிகாரத்தைக் கைப்பற்றுவோம் என்று கூறிய சுமந்திரனின் தந்திரத்தின் ஒரு கட்ட நடவடிக்கைதான் இந்த வழக்குகளா என்பது தெரியவில்லை.

இது பற்றி சுமந்திரனிடம் கேட்கும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை. தப்பி தவறி கிடைத்து, நான் கேட்டிருந்தால் "நாங்கள் வழக்காளியும் இல்லை. நான் இந்த வழக்கில் முன்னிலையாகவும் இல்லை. இந்த வழக்கில் நானும் எதிர்மனுதாரரோ தெரியவில்லை" – என்று அவர் பதில் சொல்லியிருப்பார் என எனக்குள் தோன்றியது. என்ன, என் ஊகம் சரிதானே வாசகர்களே...?

**சாவகச்சேரியில்...**

2025 ஆம் ஆண்டு மே மாதம் 6ஆம் திகதி இடம்பெற்ற உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலின்போது சாவகச்சேரி நகர சபை மற்றும் சாவகச்சேரி பிரதேச சபையில் போட்டியிட்டு உறுப்பினர்களாகத் தேர்வான இருவரும் அந்தந்தச் சபை எல்லைப் பரப்புக்குள் தம்மை ஒரு வாக்காளராகப் பதிவு செய்வதற்குத் தகுதி அற்றவர்கள் என்ற அடிப்படையில் இருவரின் உறுப்புரிமைகளையும் இரத்துச் செய்யத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உத்தரவிடக் கோரி இரண்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மனுவைப் பரிசீலித்து உடனடியாக நடைமுறைக்கு வரக் கூடியதாக இடைக்காலத் தடை விதிக்கும் படியும் மனுவில் கோரப்பட்டுள்ளது.

இந்த இரு மனுக்களும் இன்று மன்றில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் படவுள்ளன.

வழக்குத் தொடுநர் சார்பில் இன்று சிரேஷ்டசட்டத்தரணிசுரேன்பெர்னாண்டோ முன்னிலையாகி வழக்கின் விவரத்தை எடுத்துரைப்பார்.

சாவகச்சேரி நகர சபை மற்றும் சாவகச்சேரி பிரதேச சபையில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் சார்பில் தேர்வான இரண்டு உறுப்பினர்கள் சார்பிலும் சிரேஷ்ட சட்டத்தரணி குமாரவடிவேல் குருபரன் முன்னிலையாகக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**அநுரவுக்கு...**

நிகழ்வின் பின்னர், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் ஜேர்மன் ஜனாதிபதி பிராங்க் வோல்டர் ஸ்டெய்ன்மையருக்கும் இடையில் இரு தரப்பு பேச்சுகள் இடம்பெற்றன.

இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார மற்றும் சர்வதேச உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து இங்கு விரிவாகக் கலந்துரையாடப்பட்டதுடன், தொழில் பயிற்சி மற்றும் சுற்றுலாக் கைத்தொழில் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்தும் இங்கு விசேட கவனம் செலுத்தப்பட்டது.












# கோர விபத்தில் ஒருவர் மரணம்
## 6 பேர் படுகாயம்

அநுராதபுரம் – இபலோகம பொலிஸ் பிரிவின் ஹிரிபிட்டியாகம சந்திக்கு அருகில் வான் ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ள துடன் 6 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்றுப் புதன்கிழமை அதி காலை 3 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர்கள் கெக்கிராவை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் போதனா வைத் தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

கெக்கிராவை, அளுத்தென்னாவ, காகம பகு தியை வசிப்பிடமாகக் கொண்ட 48 வயதுடைய குடும்பஸ்தரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

காயமடைந்தவர்களில் நான்கு பெண்களும் இரண்டு ஆண்களும் அடங்குகின்றனர்.

காயமடைந்த அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை இபலோகம பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர்.

# ஜேர்மன் வெளியுறவு அமைச்சரை சந்தித்துக் கலந்துரையாடிய அநுர



ஜேர்மன் கூட்டாட்சி குடியரசுக்குஉத்தியோகபூர்வவிஜயம்மேற் கொண்டுள்ள ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, நேற்று மாலை பெர்லினின் வொல் டொப் எஸ்டோரியா ஹோட்ட லில் ஜேர்மன் வெளியுறவு அமைச் சர் ஜொஹான் வடபுலைச் சந் தித்துக் கலந்துரையாடினார்.

அரச முன்னுரிமைகளின் அடிப்படையில் வர்த்தகம், டிஜிட்டல், பொருளாதாரம், முதலீடு மற்றும் தொழில் பயிற்சி வாய்ப்புகள் உட்பட இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை விரிவுபடுத்துவ தற்கான புதிய வழிகள் குறித்து இந்தச் சந்திப்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

வெளிநாட்டலுவல்கள், வெளி நாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், ஜேர்மனிக்கான இலங்கைத் தூதுவர் வருணி முதுகுமாரன, இலங்கை முத லீட்டு சபையின் தலைவர் அர்ஜுன ஹேரத், வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் வர்த்தக அமைச்சின் பணிப்பாளர் நாயகம் (ஐரோப்பா மற்றும் வட அமெரிக்கா) சுகீஷ்வர குணரத்ன மற்றும் பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# கெஹலிய ரம்புக்வெலவின் வீட்டுப் பணிப்பெண் கைது!



முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்குச் சொந்தமான வீடொன்றில் பணியாற்றும் பணிப் பெண் ஒருவர் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவினரால் நேற்றுப் புதன்கிழமை கைது செய்யப் பட்டுள்ளார்.

கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதி ரான ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவினரால் மேற்கொள்ளப் பட்டு வரும் விசாரணைகளின் அடிப் படையில் அவரது பணிப்பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

இரத்தினபுரி – எம்பிலிப்பிட்டிய பிர தேசத்தைச் சேர்ந்த பெண்ணே கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பணிப்பெண்ணை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக் குழுவினர் நடவடிக்கை எடுத்து வரு கின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**மின்சாரக் கட்டணம்...**

மின்சாரக் கட்டணத்தை 18.3 சதவீதம் அதிகரிப்பதற்குப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு முன்மொழிவை மின்சார சபை வழங்கியது. இதனை மறு ஆய்வு செய்ததுடன், மக்களின் கருத்துகளையும் கேட்டறிந்த பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, மின்சாரக் கட்டண அதிகரிப்பை 15 சதவீதமாகக் கட்டுப்படுத்தி அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

இந்த ஆண்டில் மின்சாரக் கட்டணத் தில் மேற்கொள்ளப்படும் இரண்டாவது திருத்தம் இதுவாகும். முன்னர், கடந்த ஜனவரி 18ஆம் திகதி மின்சாரக் கட்டணம் திருத்தப்பட்டது. அப்போது, 20 சதவீதத் தால் மின் கட்டணம் குறைக்கப்பட்டது. எனினும், 2024ஆம் ஆண்டுடன் ஒப்பிடு கையில் தற்போதைய அதிகரிப்பு 8 சத வீதம் குறைவாகவே உள்ளது என்று கூறப் படுகின்றது.

வீடுகளுக்கான மின்சாரக் கட்டணம் முதல் 30 அலகுகளுக்கு 20 ரூபா (ரூ.215) அதிகரித்துள்ளது. இது 60 அலகுக ளுக்கு 85 ரூபா (ரூ. 585) உயர்வடை கின்றது. மேலும், 90 அலகுகளுக்கு 240 ரூபாவும் (ரூ. 1,720), 120 அலகுகளுக்கு 360 ரூபாவும் (ரூ. 3,040), 150 அலகுக ளுக்கு 600 ரூபாவும் (ரூ. 4,770), 180 அலகுகளுக்கு 840 ரூபாவும் (ரூ. 6,000), 300 அலகுகளுக்கு 2,020 ரூபாவும் (ரூ.13,920) அதிகரித்துள்ளன.

மத, தொண்டு நிறுவனங்களுக்கு முதல் 90 அலகுகளுக்கு எந்த அதி கரிப்பும் இருக்காது. தற்போதைய அலகு ஒன்றுக்கான கட்டணம் 4.50 ரூபாவாக வும், மாதாந்தக் கட்டணமான ரூ. 75, ரூ. 200 என்பன மாறாமல் இருக்கும். 90 அலகுகளுக்கு மேல் பயன்படுத்தும் போது 12 சதவீதம் கட்டணம் அதிகரிக்கும்.

இதேவேளை, மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்ட போதிலும் 2024ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைந்த கட்டணம் என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் கே.பி.எல். சந்திரலால் தெரிவித்தார்.

மேலும், பொது நோக்க துறை யினருக்கு 14 சதவீதமும், தொழில்துறை யினருக்கு 15 சதவீதமும், ஹோட்டல் துறையினருக்கு 15 சதவீதமும், அரச நிறுவனங்களுக்கு 16 சதவீதமும் மின் சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் கூறினார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## லாயக்கற்ற அரசு இது!

பொது மக்களுக்கு 'ஷொக்' அடிக்கும் செய்தி ஒன்று விரைவில் வரும் என்று இப்பத்தியில் சில தினங்களுக்கு முன்னர் சுட்டியிருந்தோம்.

மின்சாரக் கட்டணம் பதினெட்டு வீதத்தினால் அதிகரிக்கலாம் என எதிர்வு கூறியிருந்தோம்.

இப்போது 2025 ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில் மின்சாரக் கட்டணத்தை ஒட்டுமொத்தமாக 15 வீதத்தினால் அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த மின் கட்டண திருத்தம் உடனடியாக - இன்று முதல் - நடைமுறைக்கு வருவதாக அந்த ஆணைக்குழு அறிவித்துள்ளது.

நாடு பொருளாதார ரீதியில் பெரும் பின்னடைவைச் சந்தித்து அதலபாதாளத்தில் வீழ்ந்திருந்தது. அதிலிருந்து நாட்டை மீட்டெடுப்போம் என்று வாக்குறுதி கூறி, அதனையே தன்னுடைய தேர்தல் கோஷமாகப் பாவித்து ஜனாதிபதித் தேர்தலிலும், பின்னர் நாடாளுமன்றத் தேர்தலிலும் பெருவெற்றியீட்டி ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியது ஜே.வி.பியைப் பிரதான பங்காளியாக உள்ளடக்கிய தேசிய மக்கள் சக்தி.

பொருளாதார மீளெழுச்சியை முன்னெடுப்போம் என்று சூளுரைத்து, அதன் அடிப்படையில் அதிகாரத்தைக் கைப்பற்றிய இந்த அரசு, பொருளாதார விடயங்கள் அனைத்திலும் தான் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல், அவற்றுக்குத் தலைகீழான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. அதற்கு இந்த மின் கட்டண உயர்வு நல்ல உதாரணம்.

தாங்கள் ஆட்சிக்கு வந்தால் சர்வதேச நாணய நிதியத்துடன் முன்னைய அரசு செய்து கொண்ட இணக்கப்பாடுகளை மாற்றி அமைத்து, புதிய ஒப்பந்தம் ஒன்றை செய்து கொள்வோம் என வாக்குறுதி அளித்த தேசிய மக்கள் சக்தி, அதன் அடிப்படையில் மக்கள் வழங்கிய ஆணையை மீறிச் செயல்படுகிறது. முன்னைய அரசு சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொண்ட உடன்படிக்கையை அப்படியே ஏற்று அதன்படி தொடர்கின்றது இந்த அரசாங்கம்.

சர்வதேச நாணய நிதியத்தின் அடுத்த கட்ட தவணைக் கொடுப்பனவைப் பெறுவதற்காகவே இந்த மின் கட்டண அதிகரிப்பை இந்த அரசு முன்னெடுத்திருப்பதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில் மின்சார கட்டணத்தை 9 ஆயிரம் ரூபாயிலிருந்து 6 ஆயிரம் ரூபாவாகவும், மூவாயிரம் ரூபாவிலிருந்து இரண்டாயிரம் ரூபாவாகவும் குறைப்போம் என்றார் அநுரகுமார திஸநாயக்கா. மின்சார கட்டணத்தை 33 வீதம் குறைக்க முடியும் என்று மேடைக்கு மேடை பிரலாபித்தார். ஆனால் ஜனாதிபதித் தேர்தலிலும் நாடாளுமன்றத் தேர்தலிலும் பெருவெற்றியை அளித்து மக்கள் அங்கீகாரத்தை வழங்கிய போதிலும் - ஆணை தந்த போதும் - அந்த மின் கட்டண விடயத்தில் அவரது அரசு தலைகீழாக நடந்து கொண்டிருக்கின்றது. மக்களுக்கு அளித்த வாக்குறுதிக்கு மாறாக செயற்பட்டிருக்கின்றது.

33 வீத மின் கட்டணக் குறைப்பை ஏற்படுத்துவோம் என்று வாக்குறுதி அளித்து, அதன் அடிப்படையில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய அநுரகுமார திஸநாயக்காவின் அரசு, இப்போது மின் கட்டணத்தை 15 வீதம் அதிகரித்து, மக்கள் ஆணையை மீறி உள்ளது. மக்களை ஏமாற்றி உள்ளது.

மின் கட்டணத்தை உயர்த்தும் இந்த நடவடிக்கையினால் பொருள்கள் மற்றும் சேவைகளின் விலைகள், கட்டணங்கள் எகிறப் போகின்றன. மக்கள் பெரும் நெருக்கடிக்குள் - கஷ்டத்துக்குள் - ஆழ்த்தப்படும் ஆபத்து நேர்ந்துள்ளது.

தான் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் உறுதிப்பாடு இந்த அரசுக்கு இல்லை. அவற்றைக் காற்றில் பறக்க விட்டு, தான் லாயக்கற்ற அரசு என்பதை அது இந்த நடவடிக்கை மூலம் நிரூபித்து நிற்கிறது.



# கனகராயன்குளம் தெற்குக் கிராம அபிவிருத்திச்சங்க காணியை பொலிஸார் இதுவரை விடுவிக்காதமை குறித்து கடும் ஆட்சேபம்

## பிரதேச அபிவிருத்தி குழுக்கூட்டத்தில் சத்தியலிங்கம் எம்.பி. கடும் கண்டனம்





கனகராயன்குளம் தெற்கு கிராம அபிவிருத்திச்சங்க காணியை பொலிஸார் இதுவரை விடுவிக்காதமை குறித்து வவுனியா வடக்கு பிரதேச அபிவிருத்தி குழுக்கூட்டத்தில் தமிழ் அரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் கடும் கண்டனம் தெரிவித்தார்.

இக்கூட்டம் நேற்று காலை பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தலைமையில் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கமும் கலந்துகொண்டார். பல்வேறு முக்கிய விடயங்கள் தொடர்பில் இதன்போது கவனம் செலுத்திய நாடாளுமன்ற உறுப்பினர் உரிய தரப்பினரின் நடவடிக்கைக்கு அவற்றை கொண்டு சென்றார்.

பொலிஸாரால் ஆக்கிரமிக்கப்பட்டு தற்போது விடுவிக்க அனுமதி வழங்கப்பட்ட கனகராயன்குளம் தெற்கு கிராம அபிவிருத்திச்சங்க காணியை பொலிஸார் இதுவரை விடுவிக்காமல் இருப்பதற்கான பிரச்சினை தொடர்பில் அவர் பொலிஸாரைக் காரசாரமாக விமர்சித்து கேள்வி எழுப்பினார். அடுத்த கூட்டத்திற்கிடையில் காணியை விடுவிப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வனவள திணைக்களத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள கல்மடுக்குளம் உள்ளிட்ட சில குளங்களையும் பொதுமக்களின் காணிகளையும் உடன் விடுவிக்குமாறு வனவள திணைக்களத்திடம் கோரப்பட்டதுடன், அவசர அவசரமாக எல்லைக்கற்கள் இடும் செயற்பாட்டினை உடன் நிறுத்துமாறும் கோரினார். பிரதேச அபிவிருத்தி குழுவும் அதற்கான அனுமதியை வழங்கியது.

கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் உறுமய காணி உறுதி வழங்கும் செயற்பாட்டிற்காக மக்களிடம் இருந்து காணி அனுமதி பத்திரங்கள் பெறப்பட்டன. எனினும் இதுவரை காணி உறுதிகளும் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. அத்துடன் பெறப்பட்ட காணி அனுமதி பத்திரங்களும் திருப்பி வழங்கப்படவில்லை. இதுபற்றி குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உரிய அமைச்சுடன் பேசி இதற்கான தீர்வினை வழங்குமாறு கேட்டிருந்தார்.

அரச திணைக்களங்களுக்கு சொந்தமான காணிகளுக்கான காணி அனுமதி பத்திரம் வழங்கல் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

A9 வீதியூடாக பயணிக்கும் பஸ்கள் பாடசாலை நேரத்தில் மாணவர்களை ஏற்றி செல்வதில்லை எனும் குற்றச்சாட்டு பொதுமக்களால் சுமத்தப்படுகின்றது. அதற்கேற்ற வகையில் நிரந்தரமான ஏற்பாடு ஒன்றினை மேற்கொண்டு மாணவர்களுக்கான போக்குவரத்து ஒழுங்கை மேற்கொள்ளுமாறு கோரினார்.

வவுனியா வடக்கில் தொடர்ச்சியாக கால்நடைகள் திருடப்பட்டு வருகின்றன. அண்மையில் ஒரு இரவில் ஒரு இடத்திலேயே 32 கால்நடைகள் இரவு நேரத்தில் களவாடிச்செல்லப்பட்டுள்ளது. இது பற்றி பொலிஸில் முறையிட்டாலும் பொலிஸார் உரிய நடவடிக்கை மேற்கொள்வதில்லை என பொது மக்களால் தெரிவிக்கப்படுகின்றது. பொலிஸாரின் அனுமதியுடன் இந்தக் களவுகள் இடம்பெறுகின்றனவா என கெள்வியெழுப்பிய அவர் எதிர்காலத்தில் இவ்விடயத்தில் அதிக கவனம் செலுத்துமாறு கேட்டிருந்தார்.

புளியங்குளம் முத்துமாரிநகர், இராமனூர், கனகராயன்குளம் ரயில்வேக் கடவைகள், அதனூடான பாதைகள் சீரமைப்பு தொடர்பில் பேசியமையுடன், ரயில்வேத் திணைக்களம் நேற்றைய கூட்டத்திற்கு சமுகமளிக்காமையால் இவ்விடயத்தை மாவட்ட அபிவிருத்தி குழுக்கூட்டத்தில் பேசி நடவடிக்கை எடுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

வவுனியா வடக்கில் சில பாடசாலைகள் மூடப்பட்டுள்ள நிலையில் அவற்றில் சிலவற்றை மீள திறந்து பயன்படுத்தல் பற்றி பேசப்பட்டது. இதற்கு குறித்த பகுதி மக்களும் விருப்பம் தெரிவித்துள்ளனர். உரிய நடவடிக்கை மேற்கொள்வதாக வலயக் கல்வி பணிப்பாளர் பதிலளித்தார்.

இந்த விடயங்களுடன் மேலும் பல விடயங்கள் பற்றியும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டன. இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வவுனியா வடக்கு பிரதேச செயலாளர், திணைக்கள தலைவர்கள், பொலிஸார் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் கலந்துகொண்டனர்.

# கல்மடுக்குளத்தையும் அதன் கீழான வயல்நிலங்களையும் விடுவியுங்கள்!

## ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் ரவிகரன் எம்.பி வலியுறுத்து





**(விஜயரத்தினம் சரவணன்)**

வவுனியா வடக்கு பிரதேசசெயலர் பிரிவிற்குட்பட்ட தமிழர்களின் பூர்வீக கல்மடுக்குளத்தையும், அதன்கீழான வயல்நிலங்களையும் விடுவிப்புச் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு வவுனியா மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்கவிடம் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

அத்தோடு தமிழ் மக்கள் நீண்டகால இடப்பெயர்வைச் சந்தித்த இடங்கள், தற்போது பயன்பாடின்றி பற்றைக் காடுகளாகக் காணப்படுகின்றபோது, அந்தஇடங்களை வனப்பகுதியாகக் கருதி வனவளத் திணைக்களம் ஆக்கிரமிப்புச் செய்யும் செயற்பாட்டிற்கும் நாடாளுமன்ற உறுப்பினர் இதன்போது தனது வன்மையான கண்டனங்களைத் தெரிவித்தார்.

இவ்வருடத்திற்கான இரண்டாவது வவுனியா வடக்கு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

கல்மடுக்குளம் என்றொரு குளம் இருப்பின், அக்குளத்தின்கீழ் மக்களுக்கு வயல்காணிகள் கட்டாயம் இருந்திருக்கும். எனவே அக்குளத்தின் கீழ் மக்களுக்கு வயல் காணிகள் பகிர்ந்தளிக்கப்படவேண்டும். இவ்வாறிருக்கும்போது வனவளத்திணைக்களம் மக்களுக்குரிய வயல்காணிகளை பகிர்ந்தளிக்க முடியாது எனக் கூறுவதை ஏற்றுக் கொள்ளமுடியாதென நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இதன்போது தெரிவித்தார்.

இந்நிலையில் வனவளத்திணைக்கள அதிகாரி பதிலளிக்கையில் –

கல்மடுக்குளமென வனவளத் திணைக்களத்தால் அடையாளப் படுத்தப்பட்டுள்ள பிரதேசம் நடுக்காட்டிற்குள், ஐந்து கிலோமீற்றர் தூரத்திலேயே காணப்படுகின்றது. அந்த வகையில் அக்குளம் நடுக்காட்டிற்குள் காணப்படுவதால், அது வனமாக பாதுகாக்கப்படுவதால் அதனை விடுவித்துக் கொடுக்க முடியாதநிலை காணப்படுவதாகத் தெரிவித்தார்.

இதன்போது வனவளத் திணைக்கள அதிகாரியின் இக்கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாதெனத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், கடந்தகால அசாதாரண சூழ்நிலைகாரணமாக அந்தப் பகுதியில் குடியிருந்த, விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்ட தமிழ் மக்கள் அந்தல் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்துள்ளனர் எனத் தெரிவித்தார்.

இவ்வாறு இடப்பெயர்வைச் சந்தித்த மக்கள் அவர்களுடைய பகுதிகளில் மீளக்குடியமர்த்தப்படாதநிலை காணப்படுகின்றது. அத்தோடு அவர்கள் விவசாய நடவடிக்கைக்காகப் பயன்படுத்திய குளங்களும், குளங்களுக்குக் கீழான வயல்நிலங்களும் விடுவிக்கப்படாத நிலையிலும் காணப்படுகின்றன.

இந்நிலையில் மக்கள் குடியிருந்த மற்றும், விவசாய நடவடிக்கைக்குப் பயன்படுத்திய நிலங்கள் பற்றைக் காடுகளாகக் காணப்படுகின்றன.

இவ்வாறு மக்கள் விவசாயத்திற்காக பயன்படுத்திய குளமும், வயற்காணிகளும் நீண்டகாலமாக பயன்படுத்தாத நிலையில் பற்றைக்காடுகளாக காணப்படும்போது, அந்தப் பகுதியை வனப்பகுதி எனக்கூறிக்கொண்டு வனவளத் திணைக்களம் விடுவிப்புச் செய்யாமல் தொடர்ச்சியாக ஆக்கிரமித்துவைத்திருப்பது நியாயமற்ற செயற்பாடென ரவிகரன் இதன்போது தெரிவித்தார்.

இந்தக் கல்மடுக்குளம் என்ற பகுதியில் மக்களால் முன்பு விவசாயம் செய்யப்பட்டமையினால்தால் தற்போதும் கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் அந்தச்க் குளம் தொடர்பான பதிவுகள் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டினார்.

எனவே குறித்த காணிகளை அரசாங்கம் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனத் தெரிவித்தார். அதை விடுத்து இவ்வாறாக திணைக்களங்கள் மக்களின் காணிகளை தொடர்ந்தும் அபகரிப்புச் செய்துவைத்திருந்தால் மக்கள் எங்கேசெல்வார்கள் எனவும் அவர் கேள்வி எழுப்பினர்.

கடந்த காலங்களில் முல்லைத் தீவு, வவுனியா, மன்னார், கிளிநொச்சி எனப் பாரிய அளவில் மக்களால் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு, நெல் வடக்கிலிருந்து தென்பகுதிக்கு ஏற்றுமதிசெய்த வரலாறுகளே காணப்பட்டன. இவ்வாறு மக்களால் நெற்செய்கைக்காக பயன்படுத்தப்பட்ட பெருமளவான காணிகளை அரச திணைக்களங்கள் ஆக்கிரமித்துள்ள நிலையே காணப்படுகின்றது என்றார் அவர்.

அத்தோடு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும், பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க இந்தவிடயத்தில் கூடுதல் கவனமெடுக்க வேண்டுமென வலியுறுத்திய ரவிகரன், அரசதிணைக்களங்களால் அபகரிக்கப்பட்டுள்ள மக்களின் குடியிருப்பு மற்றும், விவசாயக்காணிகளை விடுவிப்புச்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் கோரிக்கை முன்வைத்தார்.

அதேவேளை கல்மடுக்குளத்தின் கீழ் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு விண்ணப்பத்தவர்களின் தரவுகளையும், அங்கு ஏற்கனவே மக்கள் பயிற்செய்கை மேற்கொண்டமைக்கான ஆதாரங்களையும் வவுனியா வடக்கு பிரதேசசெயலரிடம் சமர்ப்பிக்குமாறு கமநல அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தரிடம் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இதன்போது வலியுறுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



# மேல் கொத்மலை, விமலசுரேந்திர நீர்த்தேக்கங்களின் வான் கதவு திறப்பு

நிலவும் சீரற்ற வானிலையினால் மேல் கொத்மலை மற்றும் விமலசுரேந்திர நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் இதனைத் தெரிவித்துள்ளது.

இந்த நீர்த்தேக்கத்தின் நீரேந்தும் பகுதிகளில் பலத்த மழை பெய்துவருவதால் நீர்த்தேக்கத்தின் தாழ் நிலப் பகுதிகளில் வசிப்பவர்கள் அவதானமாக செயற்படுமாறு நீர்த்தேக்கத்துக்குப் பொறுப்பான பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கெசெல்கமுவ ஓயாவின் நீர்மட்டமும் உயர்ந்துள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதேநேரம், தொடர்ந்து பெய்துவரும் கடும் மழையினால் சென்கிளேயர் மற்றும் டெவோன் நீர்வீழ்ச்சிகளிலும் தண்ணீரின் அளவு அதிகரித்துள்ளது.



# கொத்மலை பஸ் விபத்து தொடர்பான விசாரணை குழு அறிக்கை வெளியீடு

கொத்மலை – கெரண்டிஎல்ல பகுதியில் 23 பேர் உயிரிழந்த பஸ் விபத்துக்கான காரணங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் விசாரணை அறிக்கை பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபாலவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பஸ் சாரதிக்கு ஏற்பட்ட சோர்வு, நித்திரை கலக்கம் மற்றும் ஓய்வின்மை ஆகிய காரணங்களினாலேயே விபத்து நேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துரைத்த குறித்த விசாரணைக்குழுவின் பிரதானி சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண, மேற்படி பஸ்ஸின் சாரதி மற்றும் நடத்துநர் உட்பட, 84 பேர் பயணித்தனர் என குறிப்பிட்டுள்ளார்.

சாரதிக்கு நித்திரை கலக்கம் ஏற்பட்டதனை அடுத்து அருகிலுள்ள குழியொன்றில் விழுந்து பஸ் ட்டுப்பாட்டை இழந்துள்ளது. இதனையடுத்தே விபத்து நேர்ந்துள்ளது.

எவ்வாறாயினும் விபத்தில் மரணித்த மேற்படி சாரதியின் மீது முழுப் பொறுப்பையும் சுமத்த முடியாது என சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.



# துஷார உபுல்தெனியவுக்கு தொடர்ந்து விளக்கமறியல்

பணி இடைநீக்கம் செய்யப்பட்ட சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதன்படி அவரை ஜூன் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஜனாதிபதியின் பொது மன்னிப்பை முறைகேடாகப் பயன்படுத்தி, கடந்த விசாக பூரணை தினத்தின் போது, சிறைக் கைதிகள் விடுவிக்கப்பட்டமை தொடர்பாக எழுந்த குற்றச்சாட்டுகள் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக, சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய கடந்த 9 ஆம் திகதி குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையானார்.

இதன்போது அவர் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.



# பொதுமன்னிப்புக்கான நிபந்தனை கடுமையாக்கப்படும்; நீதி அமைச்சு

இலங்கையில் தேசிய நிகழ்வுகளைக் கருத்தில் கொண்டு வழங்கப்படும் ஜனாதிபதியின் பொதுமன்னிப்புக்கான நிபந்தனைகளை, இனிவரும் காலங்களில் நீதி அமைச்சு கடுமையாக்கும் என்று நீதியமைச்சர் ஹர்சன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

பொது மன்னிப்பின் கீழ் கைதிகளை விடுவிப்பதில் அண்மையில் கண்டறியப்பட்ட முறைகேடுகளைக் கருத்திற் கொண்டு இந்த செயற்பாடு நடைமுறைக்கு வரவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

தேசிய சுதந்திர தினம், விசாக பூரணை மற்றும் கிறிஸ்மஸ் போன்ற நிகழ்வுகளின் போது, ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் சிறைக்கைதிகள் விடுவிக்கப்படுகின்றமை வழமையாகும் எனக் கூறினார்.

மேலும் இதற்காக, சிறை அதிகாரிகளால் விடுவிக்கப்பட வேண்டிய கைதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான அளவுகோலை நீதி அமைச்சு உருவாக்குகிறது.

எனினும், எதிர்காலத்தில் கைதிகளை விடுவிப்பதற்கான புதிய அளவு-கோல்களை உருவாக்க ஒரு குழுவை நியமிக்கவுள்ளதாக நீதியமைச்சர் ஹர்சன நாணயக்கார தெரிவித்துள்ளார்.







# டோனி பிளேயர் நிறுவன பிரதிநிதிகள் ஜனாதிபதி செயலாளருடன் சந்திப்பு

## நான்கு முக்கிய நிறுவனங்களுக்கு நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகள்

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க மற்றும் உலகளாவிய மாற்றத்திற்கான டோனி பிளேயர் நிறுவனத்தின் அதிகாரிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

புதிய அரசாங்கத்தின் வேலைத்திட்டங்களின் முன்னுரிமைகளை இனங்கண்டு அதற்கு ஆதரவளிப்பதே, இந்த சந்திப்பின் நோக்கமாகும்.

டிஜிட்டல் பொருளாதார அமைச்சு, கமத்தொழில் அமைச்சு, ஏற்றுமதி அபிவிருத்தி சபை மற்றும் முதலீட்டு சபை ஆகியவற்றால் செயல்படுத்தப்படும் திட்டங்களை ஆய்வு செய்து, அவற்றின் முன்னுரிமைகளை அடையாளம் கண்டு, அவற்றுக்கான நிதி மற்றும் தொழில்நுட்ப ஆதரவை வழங்குவது குறித்து, இந்தக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

டோனி பிளேயர் நிறுவனத்தின் அதிகாரிகளினால் மேற்கொள்ளப்படும் உலகளாவிய மாற்றத்திற்கான இந்தக் களப்பயணத்தின் போது, ஒவ்வொரு அமைச்சுக்கும் சென்று வேலைத்திட்டங்களை உன்னிப்பாகக் கண்காணிப்பதுடன், வேலைத்திட்டங்களுக்கு ஆதரவளிப்பது தொடர்பில் இங்கு இணக்கம் காணப்பட்டது.

இந்த நிகழ்வில், ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரோஷன் கமகே, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரசல் அபோன்சு, டோனி பிளேயர் நிறுவனத்தின் ஆசிய பசுபிக் ஆலோசனைப் பிரிவின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஜலீல் ரஷீத், ஆசிய பசுபிக் பணிக்குழாமின் அரசதுறை இணைப்புத் தலைவர் எனா ஏடின், கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் பணிப்பாளர் (கமத்தொழில் தொழில்நுட்பம்) பீ.எம். வீ.எஸ் பஸ்நாயக்க, டிஜிட்டல் பொருளாதார அமைச்சின் பணிப்பாளர் (அபிவிருத்தி) ஜானக கீகியனகே, இலங்கை முதலீட்டு சபையின் பணிப்பாளர் நாயகம் ரேணுகா எம். வீரகோன், ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் தலைவர் பிரதான நிறைவேற்று அதிகாரி மங்கள விஜேசிங்க மற்றும் பலர் கலந்து கொண்டனர்.









# மட்டு. மாவட்டத்தில் ரூ.813 கோடி பெறுமதியில் 2,077 திட்டங்களை முன்னெடுப்பதற்கு அனுமதி

## அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவிப்பு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் 8,130 மில்லியன் ரூபா பெறுமதியான 2,077 திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக மாவட்ட அபிவிருத்தி குழுவின் புதிய தலைவரும் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சருமான சுனில் ஹந்துன்னெத்தி தெரிவித்தார்.

மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டம் நேற்றுப் புதன்கிழமை மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜே.ஜே முரளிதரனின் ஒருங்கமைப்பில் பழைய மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி தலைமையில் இடம்பெற்றபோது கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்க தொடர்பாக அமைச்சர் அறிவித்தார்.



இதன் போது அவர் தெரிவிக்கையில் –

மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் இதன்போது முன்னேற்ற மீளாய்வு செய்யப்பட்டதுடன், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கான முன்மொழிவுகள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

விவசாயம், நீர்ப்பாசனம், கல்வி, சுகாதாரம், சுற்றாடல், வீதிகள் – பாலங்கள் அமைத்தல், யானை வேலி அமைத்தல், உரம் வழங்கல், அரச மருந்தகம் அமைத்தல், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இடப்பற்றாக்குறை, காணிப் பிரச்சினைகள், மேய்ச்சல் தரைப் பிரச்சினை, ஆளணியினர் பற்றாக்குறை, குடிதண்ணீர் வழங்கல் உட்பட்ட பல திணைக்களங்கள் சார் விடயங்களும் விரிவாக ஆராயப்பட்டன. அவற்றில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு பணிக்கப்பட்டுள்ளது.

இதன் போது முக்கியமாக காணப்படும் மக்கள் நலப்பணிகளைத் தெரிவு செய்து துரிதகதியில் நிறைவு செய்ய வேண்டும் என அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார் அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி.

அதேவேளை விவசாய குழு, கைத்தொழில் குழு, போக்குவரத்து குழு, சுற்றாடல் குழு ஆகியன நான்கு குழுக்களும் மாதாந்தம் கலந்துரையாடி தீர்வுகள் காணப்பட வேண்டும் என்பதுடன் குறித்த கூட்டறிக்கைகள் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்

இந்தக் கூட்டத்தில் கிழக்கு மாகாண ஆளுநரும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் இணைத் தலைவருமான பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர, மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கந்தசாமி பிரபு, எம். எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ், ஞானமுத்து சிறிநேசன், இராசமாணிக்கம் சாணக்கியன், இளையதம்பி சிறிநாத் மற்றும் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ரீ.ஏ.சி.என். தலங்கம, மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்களான திருமதி.சுதர்சனி ஸ்ரீகாந்த், திருமதி. நவரூபரஞ்ஜினி முகுத்தன் (காணி), மாவட்ட பிரதி திட்டமிடல் பணிப்பாளர் வீ.நவநீதன், உள்ளூராட்சி மன்றங்களின் ஆணையாளர்கள், செயலாளர்கள், மாவட்ட பொலிஸ் உயரதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், முப்படை உயர் அதிகாரிகள், ஏனைய திணைக்களங்களின் உயர் அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# மனித கடத்தலை தடுக்கும் ஒப்பந்தத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியது

சர்வதேச குற்றங்களுக்கு எதிராக செயற்படுவது தொடர்பில் அவுஸ்திரேலிய பெடரல் காவல்துறைக்கும் இலங்கை காவல்துறைக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வது தொடர்பான யோசனைக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இந்தநிலையில், பயங்கரவாதம், இணையவழிக் குற்றங்கள், போதைப் பொருள் கடத்தல், மனித வியாபாரம், மனிதக் கடத்தல்கள், வேறு விதத்திலான திட்டமிட்ட மற்றும் சர்வதேச குற்றங்களால் ஏற்பட்டுள்ள சவால்களுக்கு முகங்கொடுக்கும் போது இலங்கையும் அவுஸ்திரேலியாவும் இசைந்து போகும் விருப்புக்களுடன் செயலாற்றி வருவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

எனவே, சர்வதேச திட்டமிட்ட குற்றங்களைத் தடுத்தல், ஒருங்கிணைந்த சட்ட விதிப்புகளை மேம்படுத்தல், தற்போதுள்ள ஒத்துழைப்புப் பணிச்சட்டங்களைப் பலப்படுத்தல், தகவல் மேம்பாடு மற்றும் அறிவுப் பரிமாற்றம் செய்தல் போன்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு அவுஸ்திரேலிய பெடரல் பொலிஸுக்கும் இலங்கை பொலிஸுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கையொப்பமிடுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

அதற்கமைய, இருதரப்பினருக்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்காகப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.









# இன்று அளம்பில் அந்தோணியார் ஆலயப் பெருநாள் மாவட்ட அரசாங்க அதிபர் கள விஜயம் செய்து ஆய்வு

(பா.சதீசன்)

முல்லைத்தீவு மாவட்டம் அளம்பில் அந்தோணியார் ஆலயத்தின் பெருநாள் இன்றையதினம் திருப்பலி ஒப்புக்கொடுக்கும் விசேட பூஜை ஆராதனையுடன் ஆரம்பமாகி நாளை அதிகாலை பெருநாள் ஆராதனையுடன் நிறைவடைய இருக்கின்றது.

இந் நிலையில் நேற்றையதினம் மாலை இந்த ஆலயத்திற்கு முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமா மகேஸ்வரன் நேரடியாக விஜயம் செய்து ஆலயத்தின் சுற்றுச் சூழலைப் பார்வையிட்டமையுடன் ஆலய குரு முதல்வரையும் ஆலய நிர்வாகத்தினரையும் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது ஆலயத்தின் தேவைகளை ஆலய நிர்வாகத்தினர் அரசாங்க அதிபரிடம் எடுத்துக்கூறினர். இதற்கு பதிலளித்த அரசாங்க அதிபர் தாங்கள் அவசியமான தேவைகளை பார்வையிட்டு புரிந்துகொண்டனர் எனவும், துறைசார்ந்த திணைக்களங்களிடம் தேவைப்பாடுகளை முன்வைத்து சில தீர்வுகளைப் படிப்படியாக பெற்றுத்தர முயல்வர் எனவும் தெரிவித்தார்.

இந்த விஜயத்தின் போது மாவட்ட செயலக தொழில்நுட்ப உத்தியோகத்தர், ஆலய நிர்வாகத்தினர் முதலானோர் கலந்துகொண்டனர்.













# பிடியளவு கமநிலத்துக்கு திட்டத்தின் ஊடாக உள்வாங்கப்பட்ட காணியில் மீள் பயிரிடல்!

## வவுனியா நொச்சிமோட்டைக் கிராமத்தில் ஆரம்பம்

(கி.வசந்தன்)

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப் பட்டு வரும் பிடியளவு கமநிலத்துக்கு




டைக் கிராமத்தில் வசதியும் ஒருவருடைய காணியினை பயன்பாட்டுக்கு கொண்டு வந்து பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் பட்டது.

வவுனியா கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் க.விமலரூபன் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் சரத்சந்திர, மேலதிக மாவட்ட செயலாளர் (காணி) நா.கமலதாசன் மற்றும் கமநல அபிவிருத்தி உத்தியோ கத்தர்கள், விவசாயிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது பிடியளவு நிலம் செயல் திட்டம் மூலமாக உள்வாங்கப்பட்ட காணி யில் நிலக்கடலை (கச்சான்) விதைக்கும் செயற்பாடு பிரதம விருந்தினர்களி னால் ஆரம்பித்து வைக்கப்பட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது.

















# வடக்கு - கிழக்கில் தங்களின் அரசியல் இருப்பைத் தக்கவைப்பதற்கு சில தமிழ் அரசியல்வாதிகள் தையிட்டி விகாரையை வைத்து நாடகம்!

## தேசிய மக்கள் சக்தியின் எம்.பியான கந்தசாமி பிரபு விசனம்




(கனகராசா சரவணன்)

வடக்கு, கிழக்கில் சில தமிழ் அரசியல்வாதிகள் தங்களது அரசியல் இருப்பை தக்க வைப்பதற்காக தையிட்டி விகாரை வைத்து அரசாங்கத்துக்கு எதிராக மக்களை திசைதிருப்தி குழப்புகின்ற செயற்பாட்டு அரசியல் நாடகங்களை நிகழ்த்தி கொண்டிருக்கின்றனர். எனவே அரசாங்கத்தை என்னதான் குழப்புகின்ற செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தாலும் நாங்கள் தொடர்ச்சியாக எங்கள் மக்களின் ஆதரவுடன் பயணிப்போம் என தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டம் நேற்றுப் புதன்கிழமை பழைய மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜே.ஜே முரளிதரன் ஒருங்கமைப்பில் புதிய மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவராக நியமிக்கப்பட்ட அமைச்சர் ஹந்துனெத்தி தலைமையில் இடம்பெற்றது. இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் கந்தசாமி பிரபு இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மட்டக்களப்பு வைத்தியசாலையில் தற்போது புற்று நோய்ஒ பிரிவில் பல மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவது தொடர்பான பிரச்சனையை சுகாதார அமைச்சரின் கவனத் திற்குக் கொண்டு வந்ததையடுத்து அவர் அது உடனடியாகத் தீர்த்து வைக்கப்படும் என அறிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சியமைத்து இன்று ஆறு மாதங்களைக் கடந்து பயணித்துக் கொண்டிருக்கின்றோம். இந்த நாட்டில் கடந்த காலத்தில் மக்கள் பொருளாதார நெருக்கடி மற்றும் கொரோனாவினால் பல அசௌகரியங்களை எதிர்நோக்கினர்.

இருந்தபோதும் இன்று தேசிய மக்கள் சக்தி இந்த அரசாங்கத்தைப் பெறுப்பேற்றதன் பின்னர் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான வழிவகைகளையும் திட்டங்களையும் உருவாக்கி கொண்டிருந்தோம். அந்த வகையில் பொருளாதார ரீதியாக நலிவுற்ற மக்களுக்கான பல திட்டங்களை உருவாக்கி அவர்களது வாழ்வை பலப்படுத்துவதற்கான வேலையை செய்து வருகின்றோம்.

இவ்வாறு பல நல்ல விடயங்களை இன, மொழி வேறுபாடுகள் கடந்து இன ஐக்கியத்துடன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம். ஆனாலும் சில அரசியல்வாதிகள் தங்களது அரசியல் இருப்புக்காக பல தரப்பட்ட குழப்புகின்ற செயற்பாடுகளை வடக்கு, கிழக்கில் ஏற்படுத்தி வருகின்றனர்.

விசேடமாக தையிட்டி விகாரை தொடர்பான குழப்ப நிலையை அவதானித்துப் பார்த்தால் குறிப்பிட்ட தினமான போயா தினத்தில் மட்டும் அந்த விகாரை தொடர்பான ஞாபகம் ஏற்படுகின்றது. அதைக் கொண்டு இன்று மக்களை அரசாங்கத்துக்கு எதிராக திசை திருப்புகின்ற செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.

தமிழ் அரசியல்வாதிகள் தங்களது இருப்பைத் தக்க வைப்பதற்காக இந்த அரசியல் நாடகங்களை நிகழ்த்தி கொண்டிருக்கின்றனர். ஆனால் அரசாங்கம் என்ற ரீதியில் நாங்கள் இன, மத, மொழி கடந்து, எந்தவொரு வேறுபாடுகள் இன்றி, அனைவரும் இலங்கையர்கள் என்ற அடிப்படையில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

இந்த நாட்டு மக்களுக்கு தேவையான அனைத்து விடயங்களையும் இலங்கையர்கள் என எண்ணி செயற்படுகின்றோம். எங்களது ஜனாதிபதியின் கருதுகோளும் அதுதான். நாட்டு மக்கள் அனைவரும் சமன். அவர்களின் வாழ்வை ஒளியேற்ற வேண்டும் என்பதுதான் பிரதான நோக்கம். - என்றார்.




# தண்டனை சட்ட கோவையின் திருத்தச் சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிட அமைச்சரவை அனுமதி

தண்டனைச் சட்டக் கோவையின் திருத்தச் சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், நாடாளுமன்றில் சமர்ப்பிக்கவும் அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளதாக வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

உடலியல் தண்டனை மூலம் பிள்ளைகளுக்கு ஏற்படும் உடல் மற்றும் உள துன்புறுத்தல் அதிகரித்திருப்பது விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

எனவே எந்தவொரு துறையிலும் உடல் தண்டனை மூலம் துன்புறுத்தலுக்கு உள்ளாவதனை தடை செய்தல் மற்றும் உடல் துன்புறுத்தலுக்காகத் தண்டனை விதிப்பதற்கான ஏற்பாடுகளை விதிப்பதற்காகத் தண்டனைச் சட்டக் கோவையைத் திருத்தம் செய்வதற்குக் கடந்த 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது.

அதற்கமைய, ஏற்புடைய பணிகளுக்கு சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்ட தண்டனைச் சட்டக் கோவையின் திருத்தச் சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிட்டு, நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு இதற்கு முன்னர் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ள போதிலும், அதற்கமைய செயற்பட முடியவில்லை.

இந்த சட்டமூலத்தை துரிதமாக வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.










# வவுனியாவில் மரக்கடத்தல் முறியடிப்பு

(கி.வசந்தன்)

வவுனியாவில் பல்வேறு இடங்களில் வனவள திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின் போது சட்டவிரோத முறையில் கடத்த முற்பட்ட முதிரை மரக்குற்றிகள் மீட்கப்பட்டுள்ளனஎனவனவளத்திணைக்களத்தினர் நேற்றுத் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது:–

வனவளத்திணைக்களத்தினருக்கு கிடைத்த இரகசிய தகவலினையடுத்து மாவட்ட வனவள திணைக்கள அதிகாரி அஜித் ஜயசிங்கவின் நெறிப்படுத்தலின் கீழ் வட்ட வனவள அதிகாரி உடார சஞ்சீவவின் தலைமையிலான வனவள உத்தியோகத்தர்கள் மற்றும் விசேட அதிரடிப் படையினர் இணைந்து ஓமந்தை மற்றும் கூமாங்குளம் பகுதியில் விசேட நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

இந்நாடவடிக்கையின் போது 27 முதிரை குற்றிகள் மீட்கப்பட்டமையுடன் இரு கப் ரக வாகனங்களும் கைப்பற்றப்பட்டன.

இதேவேளை வவுனியாவில் உள்ள மரக்காளையில் இருந்து அனுமதி பெறப்படாத 13 லட்சம் ரூபா பெறுமதியான தேக்கு மர பலகைகள் மீட்கப்பட்டன. பறையநாலங்குளம் பகுதியில் காடழிப்பில் ஈடுபட்டவர்களிற்கு எதிரான நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், காடழிப்புக்குப் பயன்படுத்திய டோசர் வாகனமும் கைப்பற்றப்பட்டது.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக நால்வர் கைது செய்யப்பட்டுள்ளமையுடன், அவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த உள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.









# மோடியை போல பொய் சொல்லும் பிரதமரை நான் பார்த்ததே இல்லை; கார்கே விமர்சனம்



"கடந்த 65 ஆண்டுகளாக நான் அரசியலில் இருக்கிறேன். ஆனால், இவ்வளவு பொய் சொல்லி மக்களை ஏமாற்றும் பிரதமரை நான் பார்த்ததில்லை. அவர் எல்லாவற்றுக்கும் பொய் சொல்கிறார். அவர் தனது தவறை ஒப்புக்கொள்வதே இல்லை."

– இவ்வாறு காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே விமர்சித்துள்ளார்.

கர்நாடகாவின் கலபுராகியில் செய்தியாளர்களிடம் பேசிய மல்லிகார்ஜுன கார்கே, பல்வேறு கேள்விகளுக்கு பதில் அளித்தார். அப்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மத்தியில் நரேந்திர மோடி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு ஆட்சிக்கு வந்து 11 ஆண்டுகள் ஆகின்றன. இதில், 33 தவறுகள் நடந்துள்ளன. உங்களுக்குத் தெரியும், நான் நாடாளுமன்றத்திலும் இது குறித்துப் பேசி வருகிறேன். இவ்வளவு பொய் சொல்லி, இவ்வளவு தவறுகளைச் செய்து, மக்களை சிக்க வைத்து, இளைஞர்களை ஏமாற்றி, ஏழைகளை சிக்க வைத்து வாக்குகளைப் பெறும் பிரதமரை நான் பார்த்ததில்லை. நான் 65 ஆண்டுகளாக அரசியலில் இருக்கிறேன். ஆனால், அவரைப் போல யாரும் இருந்ததில்லை.

பிரதமர் எல்லாவற்றுக்கும் பொய் சொல்கிறார். அவர் சொல்லும் எதையும் செயல்படுத்துவதில்லை. மேலும், கேள்வி கேட்டால் அதற்கு அவரிடம் எந்த பதிலும் இல்லை. பணமதிப்பிழப்பு நடவடிக்கையாக இருந்தாலும் சரி, வேலைவாய்ப்பாக இருந்தாலும் சரி, விளைபொருட்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையாக இருந்தாலும் சரி, இதுபோன்ற பல விஷயங்கள் உள்ளன. எதற்கும் அவர் பதில் சொல்வதில்லை. பொய் சொல்லிவிட்டதாகவோ, தவறு செய்துவிட்டதாகவோ அவர் ஒருபோதும் மக்களிடம் ஒப்புக்கொண்டதில்லை, அதற்காக ஒருபோதும் மன்னிப்பு கேட்டதில்லை. அவர் தொடர்ந்து ஒன்றன் பின் ஒன்றாகப் பல விஷயங்களைச் சொல்லி வருகிறார். இப்போது 11 ஆண்டுகள் ஆகிவிட்டன.

உதம்பூர் – ஸ்ரீநகர் – பாரமுல்லா ரயில் திட்டம் உட்பட முந்தைய (காங்கிரஸ்) அரசின் பங்களிப்பு பற்றி அவர் எதுவும் சொல்வதில்லை. நான் ரயில்வே அமைச்சராக இருந்தபோது, காஷ்மீருக்கும் வடகிழக்கு மாநிலங்களுக்கும் அதிகபட்ச நிதியை வழங்கினேன். நாங்கள் என்ன செய்திருந்தோமோ, அதை அவர் முன்னெடுத்துச் சென்று திறந்து வைத்தார்.

மோடி எப்போதும் ஜனநாயகம் – ஜனநாயகம் என்று கூறுகிறார். சுதந்திரத்திற்குப் பிறகு, எந்த பிரதமரும் துணை சபாநாயகர் பதவியை வெற்றிடமாக வைத்திருக்கவில்லை. ஆனால் மோடி அந்தப் பதவியை வெற்றிடமாக வைத்துள்ளார். மோடியின் இந்த செயல் சட்டவிரோதமானது, ஜனநாயக விரோதமானது." என்றார்.

# பிரதமர் மோடியின் ஆட்சி இந்தியாவின் பொற்காலம்

## உத்தரப் பிரதேச முதல்வர் யோகி பாராட்டு



பிரதமர் நரேந்திரமோடியின் 11 ஆண்டு கால ஆட்சி இந்தியாவின் பொற்காலம் என உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து மூன்றாவது முறை நாட்டின் பிரதமராக இருப்பவர் நரேந்திர மோடி. அவர், தனது 11 ஆண்டு கால ஆட்சியை நிறைவு செய்கிறார். இதைப் பாராட்டும் வகையில் நாட்டின் பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் பல முக்கிய நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இந்த வகையில், பா.ஜ.கவின் முக்கிய மாநிலமான உ.பி.யின் 75 மாவட்டங்களிலும் பிரதமர் மோடி ஆட்சியின் சாதனைகளை விளக்கும் புகைப்படக் கண்காட்சி நடைபெறுகிறது. உத்தரப் பிரதேச தலைநகரான லக்னோவின் பா.ஜ.க. அலுவலகத்தில் இக்கண்காட்சியை முதல்வர் யோகி திறந்து வைத்தார். இதன்போது அவர் உரையாற்றுகையில்,

"தனது பதவிக் காலத்தில், பிரதமர் மோடி இந்தியாவிற்கு சர்வதேச அங்கீகாரத்தை வழங்கியுள்ளார். காங்கிரஸ் உள்ளிட்ட நிலையற்ற அரசாங்கங்களால் பொதுமக்கள் நம்பிக்கையை இழந்திருந்தனர். உலக அளவில் இந்தியாவின் பிம்பம் களங்கப்படுத்தப்பட்டது. ஊழல், திருப்திப்படுத்துதல் மற்றும் உறவினர்களுக்கு சலுகை காட்டுதல் இல்லாத பிரதமர் மோடியின் தலைமை, நாட்டை வளர்ச்சியடைந்ததாகவும், தன்னிறைவு பெற்றதாகவும் மாற்றி உள்ளது.

இதன் மூலம் அடுத்த 25 ஆண்டுகளுக்கு ஒரு செயல் திட்டத்தை பிரதமர் மோடி அரசு முன்வைத்துள்ளது. இந்த 11 ஆண்டுகள் சேவை, நல்லாட்சி மூலம் சமூக மற்றும் கலாச்சார பக்கத்திலும், பொருளாதார முன்னணியிலும் நாட்டிற்கு ஒரு புதிய அடையாளத்தை வழங்கியுள்ளன. மத்திய அரசின் நிர்வாகக்கொள்கையின் தெளிவு, பணி முறையின் வெளிப்படைத்தன்மை மற்றும் பொதுமக்களுக்கு பொறுப்புக்கூறல் ஆகியவை நிர்வாகத்தின் புதிய அடையாளமாக மாறிவிட்டன. வளர்ச்சி என்பது வெறும் முழக்கம் அல்ல. பாரம்பரியத்தையும், வளர்ச்சியையும் ஒருங்கிணைப்பதன் மூலம் இந்த 11 ஆண்டுகள் நாட்டிற்கு உலகில் ஒரு புதிய அடையாளத்தை அளித்துள்ளன.

கடந்த 11 ஆண்டுகளில் தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாடு மற்றும் பயங்கரவாதத்திற்கு எதிரான பூஜ்ஜிய நிலை சகிப்புத்தன்மை ஆகியவற்றில் நமது உறுதிப்பாட்டைக் கண்டோம். இந்த 11 ஆண்டு காலம், இந்தியாவின் மூலோபாய சக்தியை உலகம் உணர்ந்த நேரத்தில் நிறைவடைகிறது." என்றார்.



# அரசாங்கத்துக்கு எதிராக ஹங்கேரியில் போராட்டம்

ஹங்கேரியின் தலைநகர் புடாபெஸ்ட் நகரில் பிரதமர் விக்டோர் ஓர்பானின் அரசாங்கத்துக்கு எதிராக சுமார் 15,000 இற்கும் மேற்பட்டோர் ஒன்று திரண்டு மாபெரும் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.


ஹங்கேரியின் இடம்பெற்று வரும் ஊழல் செயற்பாடுகள் மற்றும் டுபுடீவுஞு சமூகத்தினருக்கு எதிரான அரசின் நடவடிக்கைகளைக் கண்டித்து இப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், அரசாங்கம் தமது ஜனநாயக உரிமைகளை மீறுவதாகவும் கோஷம் எழுப்பியிருந்தனர்.

இந்த போராட்டத்தில் ஏராளமான சமூக ஆர்வலர்கள், நடிகர்கள், எழுத்தாளர்கள், இசைக்கலைஞர்கள் மற்றும் பத்திரிகையாளர் கலந்துகொண்டு தமது எதிர்ப்பினை வெளியிட்டுள்ளனர்.





# வர்த்தக பதற்றங்களை தணிக்க சீனா - அமெரிக்கா உடன்பாடு

உலகின் இரண்டு பெரிய பொருளாதார நாடுகளுக்கு இடையிலான வர்த்தக பதற்றங்களைத் தணிப்பதற்கான ஒரு கட்டமைப்பிற்கு கொள்கையளவில் ஒப்புக்கொண்டுள்ளதாக அமெரிக்காவும் சீனாவும் கூறுகின்றன.

இந்த ஒப்பந்தம் அரிய பூமி தாதுக்கள் மற்றும் காந்தங்கள் மீதான கட்டுப்பாடுகளை தீர்க்க வழிவகுக்கும் என்று அமெரிக்க வர்த்தக செயலாளர் ஹோவர்ட் லுட்னிக் தெரிவித்துள்ளார்.

இரு தரப்பினரும் இப்போது இந்தத் திட்டத்தை தங்கள் ஜனாதிபதிகளான டொனால்ட் ட்ரம்ப் மற்றும் ஜி ஜின்பிங்கிடம் ஒப்புதலுக்காக எடுத்துச் செல்வதாகக் தெரிவித்துள்ளார்.

பீஜிங் மற்றும் வொஷிங்டனின் உயர் அதிகாரிகளுக்கு இடையே லண்டனில் இரண்டு நாள்கள் நடந்த பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர் இந்த அறிவிப்பு வந்தது.

நவீன தொழில்நுட்பத்திற்கு மிக முக்கியமான அரிய மண் தாதுக்களின் சீன ஏற்றுமதிகள் பேச்சுவார்த்தைகளின் பிரதான விடயமாக இருந்தன.

கடந்த மாதம், வொஷிங்டனும் பீஜிங்கும் வர்த்தக வரிகள் தொடர்பாக ஒரு தற்காலிக போர் நிறுத்தத்தை ஒப்புக் கொண்டன.

ஆனால், அதன் பின்னர் ஒவ்வொரு நாடும் மற்றொன்று ஒப்பந்தத்தை மீறியதாக குற்றம் சாட்டின.

ஸ்மார்ட்போன்கள் முதல் மின்சார வாகனங்கள் வரை அனைத்தையும் உற்பத்தி செய்வதற்கு அவசியமான அரிய மண் உலோகங்கள் மற்றும் காந்தங்களை ஏற்றுமதி செய்வதில் சீனா மெதுவாக செயல்பட்டு வருவதாக அமெரிக்கா கூறியுள்ளது.

இதற்கிடையில், குறைக்கடத்திகள் மற்றும் செயற்கை நுண்ணறிவு உடன் இணைக்கப்பட்ட பிற தொடர்புடைய தொழில்நுட்பங்கள் போன்ற அமெரிக்க பொருட்களை சீனா அணுகுவதை வொஷிங்டன் கட்டுப்படுத்தியுள்ளது.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் பல நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு ட்ரம்ப் கடுமையான வரிகளை அறிவித்தபோது, சீனாதான் மிகவும் பாதிக்கப்பட்டது.

அமெரிக்க இறக்குமதிகள் மீதான பீஜிங் அதன் சொந்த அதிக விகிதங்களுடன் பதிலளித்தது.

இது 145 வீதம் உயர்ந்த வரிப் போட்டி அதிகரிப்புகளுக்கு வழிவகுத்தது.

மே மாதம், சுவிட்சர்லாந்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் ஒரு தற்காலிக போர் நிறுத்தத்திற்கு வழிவகுத்தன.

இது சீனப் பொருள்களின் மீதான அமெரிக்க வரிகளை 30 வீதமாக குறைத்தது.

அதே நேரத்தில் பீஜிங் அமெரிக்க இறக்குமதிகள் மீதான வரிகளை 10 வீதமாக குறைத்தது மற்றும் முக்கியமான கனிம ஏற்றுமதிகள் மீதான தடைகளை நீக்குவதாக உறுதியளித்தது.

வர்த்தக ஒப்பந்தத்தை எட்டுவதற்கு இரு தரப்பினருக்கும் 90 நாள் காலக்கெடுவை வழங்கியது.

ஆனால் அமெரிக்காவும் சீனாவும் வரி அல்லாத உறுதிமொழிகளை மீறியதாகக் கூறி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.





# தாய்ப்பால் ஊட்டுவதை ஊக்குவித்தல் குறித்து சட்டமூலம் தயாரிக்க அமைச்சரவை அனுமதி

தாய்ப்பால் ஊட்டுவதை ஊக்குவித்தல் தொடர்பான சட்ட மூலத்தைத் தயாரிப்பதற்கு அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இது தொடர்பில் தெரிவித்துள்ளார்.

தாய்ப்பால் ஊட்டும் குறிகாட்டி தொடர்பில் இலங்கை மிகவும் உயர்ந்த மட்டத்தில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வர்த்தக ரீதியான குறிக்கோளை முன்நிலைப்படுத்தி பால்மா உற்பத்தித் தொழிற்றுறை மூலம் பிள்ளைகளுக்கு விடுக்கப்படும் ஒழுக்கநெறிக்கு முரணான மற்றும் பாதகமான தாக்கங்களிலிருந்து பிள்ளைகளைப் பாதுகாத்து, பிள்ளைகளின் சுகாதார மற்றும் போசாக்கை பாதுகாப்பதும், விஞ்ஞான ரீதியாக உறுதி செய்யப்பட்டுள்ள பிரதான தலையீடாக கருதி தாய்ப்பால் ஊட்டுதலை பாதுகாப்பதற்கும், தாய்ப்பால் ஊட்டுதல் தொடர்பான உலக முன்னோடி என்ற ரீதியில் இலங்கை பெற்றுள்ள மரியாதையை தொடர்ச்சியாக பேணுதலை உறுதி செய்வதையும் குறிக்கோளாக கொண்டு தாய்ப்பால் ஊட்டுதலை ஊக்குவிப்பதற்கான சட்டத்தின் மூலம் சட்ட ரீதியான ஏற்பாடுகளை அறிமுகம் செய்வதற்காக 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதற்கமைய, மேற்படி சட்டமூலத்தைத் தயாரிப்பதற்கு தற்போதைய அமைச்சரவையின் கொள்கை ரீதியான அங்கீகாரத்தை வழங்குவதற்காக சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

# கட்சியின் முடிவுகளுக்கு முரணாகச் செயற்படும் உள்ளூராட்சி உறுப்பினர்கள் மீது நடவடிக்கை

## மக்கள் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் அஷ்ரப் தாஹிர் எம்.பி. அறிவிப்பு



(அபு அலா)

கட்சியின் முடிவுகளை மீறி செயற்படுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதன் அதிகாரம் கட்சியின் செயலாளரிடமே உள்ளது என்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும், அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய அஷ்ரப் தாஹிர் தெரிவித்தார்.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பாக நாடளாவிய ரீதியில் தெரிவாகிய 140 உறுப்பினர்களின் சத்தியப் பிரமாண நிகழ்வு திருகோணமலை ஜேபாக் மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் –

தேர்தலில் வெற்றிபெற்ற 140 உறுப்பினர்களும் கட்சியின் கொள்கைகளோடு ஒத்துழைத்து செயற்பட வேண்டும். இது கட்சியின் உயர்மட்ட தீர்மானத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்ட முடிவாகும். எந்தவொரு பாகுபாடும் இல்லாமல், கட்சி ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக இந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். – என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

# ஷம்மி குமாரரத்னவுக்கு 25 வரை விளக்கமறியல்



ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட கடத்தப்பட்டு கொலை செய்து காணாமலாக்கப்பட்ட சம்பவம் தொடர்பிலான வழக்கில் பிரதான சூத்திரதாரியான இராணுவ புலனாய்வு பிரிவின் ஓய்வு பெற்ற பிரகேடியர் ஷம்மி குமாரரத்ன சாட்சியாளர் ஒருவருக்கு அழுத்தம் விடுத்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நேற்று திருகோணமலை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டதை அடுத்து எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியிலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஊடகவியலாளரான பிரகீத் எக்னலிகொட 2010 ஜனவரி 24ஆம் திகதி காணாமற்போனதுடன் அவர் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளமை இதுவரையான விசாரணைகளின் அடிப்படையில் தெரியவந்தது.

இந்த சம்பவம் தொடர்பில் இராணுவத்தின் ஓய்வு பெற்ற பிரிகேடியர் ஷம்மி குமாரரத்ன உள்ளிட்ட 10 பேருக்கு எதிராக கொழும்பு விசேட மூவரடங்கிய மேல் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டதுடன் வழக்கு விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

சூத்திரதாரிகளில் பெரும்பாலானோர் அப்போதைய இராணுவ புலனாய்வு பிரிவுடன் தொடர்புடைய அதிகாரிகளாவர்.

ஓய்வு பெற்ற பிரிகேடியர் ஷம்மி குமாரரத்ன, எக்னலிகொட வழக்கின் பிரதான சாட்சியாளரான சுரேஷ் குமார் என்பவருக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளதாக குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சியாளர்களை பாதுகாக்கும் அதிகார சபையின் விசாரணை பிரிவு பொறுப்பதிகாரி நேற்று திருகோணமலை நீதவான் நீதிமன்றத்தில் விடயங்களை முன்வைத்தார்.

ஓய்வு பெற்ற பிரிகேடியரின் தொலைபேசி இலக்கத்திலிருந்து பல சந்தர்ப்பங்களில் சாட்சியாளருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 6 ஆம் திகதி குறித்த தொலைபேசி இலக்கத்திலிருந்து மற்றுமொரு முன்னாள் இராணுவ உறுப்பினர் விடுத்த அச்சுறுத்தல் தொடர்பிலும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

சாட்சியாளர்களுக்கு அழுத்தம் விடுப்பதற்காக பயன்படுத்தப்பட்ட தொலைபேசி இலக்கம் தொடர்பில் விசாரணை செய்து விடயங்களை உறுதிப்படுத்தியுள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சியாளர்களை பாதுகாக்கும் அதிகார சபையின் விசாரணை பிரிவு பொறுப்பதிகாரி நீதிமன்றுக்கு தெரிவித்தார்.

இந்த விடயங்களை ஆராய்ந்த திருகோணமலை நீதவான் நீதிமன்றம் ஓய்வு பெற்ற பிரிகேடியர் ஷம்மி குமாரரத்னவை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைத்து உத்தரவிட்டதுடன் எதிர்வரும் 13 ஆம் திகதி மூவரடங்கிய மேல் நீதிமன்ற நீதிமன்றத்தில் இடம்பெறும் வழக்கு விசாரணையில் அவரை ஆஜர்படுத்துமாறும் உத்தரவிட்டுள்ளது.

# தென்னகோனை பதவி நீக்குவதற்கான பிரேரணை மீதான விசாரணை ஆரம்பம்



பொலிஸ் மாஅதிபர் தேஷபந்து தென்னகோனை பதவியிலிருந்து நீக்குவதற்கான பிரேரணையில் உள்ளடக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் மூவரடங்கிய குழு நேற்று சாட்சி விசாரணையை ஆரம்பித்தது.

2023ஆம் ஆண்டு வெலிகமவிலுள்ள ஹோட்டலொன்றின் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்ட சம்பவத்தின் போது உயர்திகாரிகள் தவறான பணிப்புரைகளை விடுத்ததாக மூவரடங்கிய குழு முன்னிலையில் நேற்று சாட்சியமளித்த கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரி அன்சலாம் டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவின் அப்போதைய பணிப்பாளர் நெவில் டி சில்வாவின் உத்தரவிற்கமைய ஹோட்டல் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியதாகவும் அவர் கூறினார்.

2023 ஆம் ஆண்டில் வெலிகம டபிள்யூ -15 ஹோட்டல் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டு சம்பவமே தேஷபந்து தென்னகோனை பொலிஸ் மா அதிபர் பதவியிலிருந்து நீக்குவது தொடர்பில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய குற்றச்சாட்டாகும்.

பதவிக்கான அதிகாரங்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தி தனிப்பட்ட தேவைக்காக கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவின் அதிகாரிகளை அனுப்பி ஹோட்டல் மீது துப்பாக்கிச்சூட்டை நடத்தியதாக தேஷபந்து தென்னகோன் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தில் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவின் அதிகாரியொருவரும் உயிரிழந்தார்.

நேற்று நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் கூடிய விசாரணை குழு முன்னிலையில் சாட்சியமளித்த கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவின் அப்போதைய பொறுப்பதிகாரி அன்சலம் டி சில்வா சம்பவம் தொடர்பில் விளக்கமளித்தார்.

நீதியரசர் ப்ரீத்தி பத்மன் சூரசேன தலைமையிலான விசாரணைக்குழுவில் சாட்சியமளிக்க நேற்று நால்வருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

பொலிஸ் விசேட விசாரணை பிரிவின் உப பொலிஸ் இன்ஸ்பெக்டர் துசித குமாரவும் நேற்று சாட்சியமளித்தார்.

# இன்றைய ராசி பலன்கள் - 12.06.2025




இன்று உங்களுக்கு சாதகமான நாள். நம்பிக்கை நிறைந்து காணப்படும் நாள். கடின உழைப்புக்கு வெற்றி கிடைக்கும் நாள். நீங்கள் எடுக்கும் முடிவுகள் நல்ல பலன்களை அளிக்கும்.

பணியிடத்தில் திருப்தியான சூழல் காணப்படும். கடினமான உழைப்பின் மூலம் நற்பெயரும் அதன் மூலம் நன்மதிப்பும் பெறுவீர்கள்.

உங்கள் குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும். உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிப்பீர்கள்.

இன்று நிதிநிலையில் அதிர்ஷ்டம் காணப்படும். உங்கள் பணத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள். அதிர்ஷ்டம் காரணமாக நிதிநிலையில் முன்னேற்றம் காணப்படும்.




இன்று முன்னேற்றகரமான நாளாக இருக்காது. நீங்கள் உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் கடைபிடிக்க வேண்டும். எது நடக்கிறதோ அதை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும். இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக அமைய இறை வழிபாடு மற்றும் பிரார்த்தனையை மேற்கொள்ளுங்கள்.

அதிகப் பணிகள் காரணமாக அதிருப்தி காணப்படும். உங்கள் மேலதிகாரிகளுடன் பிரச்சினைகளை சந்திப்பீர்கள்.பணிகள் அதிகம் காணப்படுவதால் ஓய்வு கிடைப்பது அரிது.

உங்கள் மனதில் குழப்பமான உணர்வுகள் காணப்படும். இதன் காரணமாக உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

இன்று பணபுழக்கம் குறைந்து காணப்படும். நிதியைப் பொறுத்த முக்கிய முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்க வேண்டும். பணத்தை கையாளும் போது கவனம் தேவை.




இன்று உங்கள் இலக்குகளில் வெற்றி கிடைக்கும் நாள். உங்களின் நேர்மையான முயற்சி மூலம் உங்களிடம் மறைந்திருக்கும் திறமைகளை நீங்கள் உணரும் நாள். இன்று முக்கிய முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

உங்கள் செயல் திறனில் உங்கள் திறமை வெளிப்படும். நீங்கள் தொடர்ந்து கடின முயற்சி செய்து உங்கள் திறமைகளை மேம்படுத்துவீர்கள்.

உங்கள் இருவரிடையே புரிந்துணர்வு குறைந்து காணப்படும். இதனால் உறவில் திருப்தியான நிலை இருக்காது.

இன்று பணப் புழக்கம் அதிகமாக காணப்படும். இந்தப் பணத்தை ஆடம்பரப் பொருள்கள் வாங்கப் பயன்படுத்தலாம்.




இன்று மந்தமான நிலையே காணப்படும். உங்கள் வளர்ச்சியை பாதிக்கும் தேவையற்ற உணர்வுகளுக்கு இடம் அளிக்காதீர்கள். அமைதியாக இருந்து எதையும் லேசாக எடுத்துக் கொள்ளுங்கள். உங்கள் குழந்தைகளின் வளர்ச்சி குறித்த கவலை காணப்படும்.

உங்களிடம் காணப்படும் தன்னம்பிக்கை காரணமாக கடினமான பணிகயும் விரைவாக செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடாதீர்கள். உங்கள் பிரச்சனைகளை நட்புடன் பேசி தீர்த்துக் கொள்ளுங்கள்.

பொறுப்புகளும் பணத் தேவைகளும் அதிகமாகக் காணப்படும். அது உங்களை வருத்தாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.




இன்று உங்களுக்கு ஆக்கப் பூர்வமான நாள், இன்று ஆற்றலும் உறுதியும் நிறைந்து காணப்படுவீர்கள். இன்று எடுக்கும் புதிய முயற்சிகள் வெற்றியை அளிக்கும்.

பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் பொறுமையுடன் பணிகளைக் கையாள வேண்டும். உங்கள் சக பணியாளர்களிடம் பேசும் போது பொறுமை தேவை.

உங்கள் துணையிடம் நட்புணர்வுடன் நடந்து கொள்வீர்கள். இதனால் உறவின் சிறப்பை உங்கள் துணை உணர்ந்து கொள்ள இயலும்.

நிதிநிலை சிறப்பாக காணப்படும் நாள். உங்கள் தேவைகள் பூர்த்தியடையும். நீங்கள் அதிக பணம் சேமிப்பீர்கள்.




இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். முக்கியமான செயல்களை வேறு ஒரு நாளைக்கு தள்ளிப்போடவும். எந்த சூழ்நிலையிலும் நம்பிக்கை இழக்காதீர்கள்.

நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள். இன்று பணியில் மூழ்கி இருப்பீர்கள். முறையாக திட்டமிடுவதன் மூலம் சிறப்பாக பணியாற்றலாம்.

உங்கள் துணையுடன் பேசும் பொது அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் இருங்கள். இதன் மூலம் கண்டிப்பாக இருவரிடையே மகிழ்ச்சி நிலவும்.

பயணத்தின் போது பணத்தை கவனமாகக் கையாளவும். கையில் அதிக பணத்தை எடுத்துச் செல்ல வேண்டாம்.

உங்களிடம் காணப்படும் சிறந்த ஆற்றல் காரணமாக இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படுகின்றது.




இன்று சற்று மந்தமான நாளாக இருக்கும். சவால்கள் நிறைந்து காணப்படும் நாள் என்பதால் உங்கள் உணர்வுகளை கட்டுபடுத்த வேண்டும். மனக் குழப்பங்களை நீக்கி தெளிவாக இருக்க வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. பணிகளைக் கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.

உங்களின் நேர்மறையான உணர்வுகள் காரணமாக உங்கள் துணையிடம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வீர்கள். இதனால் உறவில் அமைதியும் திருப்தியும் நிலவும்.

அதிக பணம் சம்பாதிக்கும் வாய்ப்பும் கணிசமான தொகை சேர்க்கும் வாய்ப்பும் இன்று குறைவு.




இன்று உங்கள் இலக்குகளில் வெற்றி கிடைக்கும் நாள். உங்களின் நேர்மையான முயற்சி மூலம் உங்களிடம் மறைந்திருக்கும் திறமைகளை நீங்கள் உணரும் நாள். இன்று முக்கிய முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

உங்கள் செயல் திறனில் உங்கள் திறமை வெளிப்படும். நீங்கள் தொடர்ந்து கடின முயற்சி செய்து உங்கள் திறமைகளை மேம்படுத்துவீர்கள்.

உங்கள் இருவரிடையே புரிந்துணர்வு குறைந்து காணப்படும். இதனால் உறவில் திருப்தியான நிலை இருக்காது.

இன்று பணபுழக்கம் அதிகமாக காணப்படும். இந்தப் பணத்தை ஆடம்பரப் பொருள்கள் வாங்கப் பயன்படுத்தலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 12.06.2025




இன்று முன்னேற்றகரமான நாளாக இருக்காது. நீங்கள் உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் கடைபிடிக்க வேண்டும். எது நடக்கிறதோ அதை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும். இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக அமைய இறை வழிபாடு மற்றும் பிரார்த்தனையை மேற் கொள்ளுங்கள்.

அதிகப் பணிகள் காரணமாக அதிருப்தி காணப்படும். உங்கள் மேலதிகாரிகளுடன் பிரச்சினைகளை சந் திப்பீர்கள்.பணிகள் அதிகம் காணப்படுவதால் ஓய்வு கிடைப்பது அரிது.

உங்கள் மனதில் குழப்பமான உணர்வுகள் காணப்படும். இதன் காரணமாக உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிப்பதை கடினமாக உணர்வீர்கள்.




இன்று வளர்ச்சிக்கும் முன்னேற்றத் திற்கும் சாதகமான நாள்.குறைந்த முயற்சியில் அதிக வெற்றி பெறு வீர்கள். இன்று நம்பிக்கை உணர்வுடன் இருப்பீர்கள். இதனால் நன்மை ஏற்படும்.

இன்று முக்கிய சந்திப்புகளில் கலந்து கொள்வதில் மும்மரமாக இருப்பீர்கள். உங்கள் கருத் துக்களை தெளிவாக எடுத்துச் சொல்வீர்கள். இது உங்கள் சகபணியாளர்களுக்கு ஆச்சரியம் அளிக்கும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை கொள் வீர்கள். இது அவரை மகிழ்விக்கும். எனவே பொதுவாக இருவரிடமும் மகிழ்ச்சி காணப்படும்.

இன்று நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். உங்கள் சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.

நீங்கள் ஸ்திரமான ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள். தேக ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்கும்.




உங்களின் சமயோசித புத்தி மற்றும் புத்திசாலித்தனம் காரணமாக இன்று பயனுள்ள பலன்கள் சாத்தியம். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

இன்று நீங்கள் சிறப்பாக செய லாற்றுவீர்கள். உங்கள் செயல் திறன் அசர வைக்கும். உங்கள் முயற்சிக்கு மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். குடும்ப பிரச்சினைகளை கலந் தாலோசித்து சுமூகமான தீர்வு காணுவீர்கள்.

பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் தேவை களை பூர்த்தி செய்துகொள்வீர்கள். பூர்வீகசொத்து மூலம் பணவரவு வர வாய்ப்புள்ளது.

உங்கள் நேர்மறை எண்ணம் மற்றும் மனஉறுதி காரணமாக இன்று நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




இன்று இனிமையான நாள். உங்க ளுக்கு சாதகமான பலன்கள் கிடைக்கும் நாள். உங்கள் செயல்களை எளிதாக முடிப்பீர்கள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும் அதிர்ஷ்டமான நாள்.

உங்கள் செயல்திறனுக்கு உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும். உங்கள் பணி களை சிறந்த தரத்துடன் முடித்து தருவீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர் கள். இதன் மூலம் நல்ல புரிந்துணர்வு தக்க வைத்துக் கொள்ள முடியும்.

இன்று பண வரவு சிறப்பாக இருக்கும். உங்கள் வங்கி யிருப்பு உயரும். நீங்கள் இன்று புதிய முதலீடுகளை செய்யலாம். அது லாபகரமாக இருக்கும்.

# கழுமல வளநகர் மலரென மலர்ந்தார்!

## [இன்று சம்பந்தர் குருபூசை]



**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா,**
மேனாள் தமிழ் மொழிக்கல்வி இயக்குநர்,
மெல்பேர்ன், ஆஸ்திரேலியா.



சீர்காழி பிறந்தார் சிவனையே கண்டார்
பாலகனாம் வயதில் பரஞானம் பெற்றார்
மூன்றகவை தன்னில் தோடுடைய செவியன்
சீர்காழி பிறந்தார் செப்பினார் தமிழில்

தத்துவம் செறிய தமிழாய் மலர்ந்தது
சைவம் வளர உரமாய் எழுந்தது
இத்தரை இறையை உணரவே வைத்தது
இறை அருளுடனே பிறந்தார் சம்பந்தர்

ஞானக் கொழுந்தாய் இருந்தார் அவரும்
தேனார் தமிழில் திருவருள் செப்பினார்
ஊனாய் உருகி உணர்வாய் உரைத்தார்
உமையே வந்து ஊட்டினார் பாலை

திருவருள் பெற்ற சீர்காழி மைந்தர்
உருவிலே குழந்தை ஆகியே இருந்தார்
கருவிலே திருவை உடையவர் ஆகி
கழுமல வளநகர் மலரென மலர்ந்தார்